முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1542

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

19.12.2023, செவ்வாய்கிழமை

1. தர்மபலம் கொண்ட அரங்கனே
தவசியாய் வாழும் தேசிகனே
பெருமைமிக்க சான்றோர் பெருமக்களை
புண்ணியபலம் கூட்டி ஞானிகளாகவே மாற்ற
2. மாற்றவே அவதாரம் புரிந்த
மாதவசியே ஆறுமுக அரங்கனே
ஆற்றல்பட உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் மார்கழி மாதம் 03 ம் நாள், 19.12.2023, செவ்வாய்கிழமை)
3. வரமென அரங்கன் உன் சக்தி வையகத்தில்
வள்ளல் தன்மையாக மாறி
பெருமைபட பல்வேறு கிளைகளாக
பேருலகமெங்கும் அன்னதான சேவையாக
4. ஆகவே உருமாறி உலகமெங்கும்
ஆற்றலாக வலம் வர
வருகவே அரங்கன் சக்தி
வையகம் ஏற்று இனிதே மாற்றம்
5. மாற்றமதும் ஞான யுகமாற்றமாக
ஞானபண்டிதன் யான் இறங்கி அருளும்
ஞானத்தலைமை கொண்ட
ஞான ஆட்சிக் காலமாகவும் மாற்றம் காணும் சடுதி என்பேன்
6. என்கவே அற்புதத்தை நிகழ்த்த
இந்த எளிமையான வல்லமையான அவதாரம்
பெருமைகொண்டு அரங்கன் எடுத்திருக்க
பூவுலகோர் அறிந்து தெளிந்துபுரிந்து ஓங்காரக்குடில் நோக்கி வந்தால்

7. வந்தால் இந்த அதிசயம் நடக்கும்
   வையகத்தார் வணங்கி அரங்கன் திருவடி பணிந்தால்
   வருவோர்க்கெல்லாம் இனி பிறவாத
   பெரும் பேறு சித்திக்கும்
8. ஆகவே அரங்கன் உண்மை நெறியை
   அகிலத்தார் ஏற்றால் வரங்களாக மாறி
   உலகோர்க்கு அழியாமையும் உறுதியாகும்
   வழங்கிய ஆறுமுகனார் என் ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–